# மூன்றரை வருடங்களைப் பற்றி, தீர்க்கதரிசி செய்தியில்...



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# மூன்றரை வருடங்களைப் பற்றி, தீர்க்கதரிசி செய்தியில்...

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

*215. கடைசி காலத்தில், உபத்திரவ காலம் தொடங்கும்போது, இப்பொழுது அந்த மூன்றரை வருடங்கள் எங்குள்ளது என்பதை, நாம் ஒரு நிமிடம், திரும்பிக் காண்போம்... மூன்றரை வருடகாலம்... அல்லது தானியேலின் எழுபது வாரங்கள் தானியேல் மொழிந்த எழுபது வாரங் களின் பிற்பகுதி மூன்றரை வருடங்கள். சபையின் காலங்களிலிருந்து எத்தனை பேருக்கு இது ஞாபகமிருக்கிறது? (சபையார் "ஆமென்" என்கின்றனர் - ஆசி) பாருங்கள்? "எழுபது வாரங்கள் நியமிக்கப்பட்டுள்ளன." எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது. பாருங்கள். "மேசியா வந்து அப்பொழுது சங்கரிக்கப் படுவார். அவர் வாரத்தின் பாதியில்*
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

*பலியையும், காணிக்கையையும் ஒழியப்பண் ணுவார். ஆகவே, யூதர்களுக்காக மேசியா வின் போதகத்திற்காக, இன்னும் மூன்றரை வருடங்கள் அங்கே உள்ளன. (தானியேலின் எழுபதாவது வாரத்தின் பிற்பகுதி - தமி ழாக்கியோன்)*

***63-03-18** முதலாம் முத்திரை*

---

***225.** இப்பொழுது, இந்த எழுபது வாரங் கள் பரிபூரணமாய் நியமிக்கப்பட்டுள்ளன. தானியேல் கூறியவண்ணம், மேசியா வந்து வாரத்தின் பாதியில் சங்கரிக்கப்படுவார். இயேசு மூன்றரை வருடகாலமாக தீர்க்க தரிசனம் உரைத்தார். இப்பொழுது தானி யேலின் இந்த வாரத்தின் பாதியில்தான் மேசியா சங்கரிக்கப்பட்டார். இந்த வாரத் தின் பிற்பகுதிதான் உபத்திரவ காலம். அப் பொழுது மணவாட்டி சபை... ஓ! இது மிகவும் மகத்தானது! இதை இழந்து போக*

வேண்டாம். மணவாட்டி மணவாளனுடன் செல்கின்றாள். ஆயிர வருஷ அரசாட்சிக்குப் பிறகு, அவர்கள் துன்மார்க்கரின் சாம்பலை மிதிப்பார்கள்.

***63-03-18*** *முதலாம் முத்திரை*

---

***233.*** *ரோமரால் உண்டாக்கப்பட்ட கால அட்டவணையில் (Calendar) 28,30,31 நாட்கள் மாறி மாறி வருகின்றன. ஆனால் உண்மையான கால அட்டவணையில் ஒவ்வொரு மாதத்திற்கும் முப்பது நாட்கள் மாத்திரமே உண்டு. சரி. ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்களை முப்பதால் வகுத்தால் சரியாக மூன்றரை வருடம் கிடைக்கின்றது. மேசியாவின் செய்தி இஸ்ரவேலுக்குப் பிர சங்கிக்கப்பட அளிக்கப்பட்ட சமயம் அது தான். முன்பு இருந்தது போல. அவர் வந்து தம்மை வெளிப்படுத்தும் போது நிகழும் காரியம். அடையாள...*

***63-03-18*** *முதலாம் முத்திரை*

---

***336.*** *உங்களிடம் ஒன்று கேட்க விரும்பு கிறேன், மூன்றரை வருட ஊழியத்திற்குப் பிறகு கிறிஸ்து சங்கரிக்கப்பட்டார். அதன் பின் 'ஆலயத்தை அழித்தவன் யார்? யார் அதை அழித்தது?' ரோமாபுரி! நிச்சயமாக. கான்ஸ்டான்ட்டின் அல்லது... இல்லை. மன்னிக்கவும். ரோம தளபதியாகிய தீத்து (Titus) என்பவன். அவன் பிரபுவை அழித் தான். இப்பொழுது கவனியுங்கள். இவனைச் சற்று கவனியுங்கள். அவன் இந்த சுவர் வரை வந்தான்.*

***63-03-18*** *முதலாம் முத்திரை*

---

***341.*** *இப்பொழுது கவனியுங்கள்! "கடைசி காலத்தில்" - கிறிஸ்து பிரசங்கித்த காலத்தி லல்ல - வாரத்தின் பிற்பகுதியில், நாம்*

இப்பொழுது தானியேலின் எழுபது வாரங் களைக் குறித்து சிந்தித்தோம். கிறிஸ்து மூன்றவரை வருடங்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார். இன்னமும் மூன்றரை வருட காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான் கூறு வது சரியா? (சபையார் 'ஆமென்' என் கின்றனர் -ஆசி) அச்சமயம் இந்த பிரபு தானி யேலின் ஜனங்களுடன் அதாவது யூதர் களுடன் உடன்படிக்கை செய்வான். அது மணவாட்டி எடுக்கப்பட்ட பிறகு சம்பவிக் கும். அவள் அதைக் காணமாட்டாள்.

**63-03-18** முதலாம் முத்திரை

---

**355.** ஆனால் யூதர்களின் செல்வம் அவன் கையில் சிக்கிக் கொண்ட பிறகு அந்த மூன்றரை வருடகாலத்தின் மத்தியில் அவன் உடன்படிக் கையை முறிக்கிறான். அவ்வாறு செய்யும்போது... ஓ... என்னே! ஓ... என்னே !

***63-03-18*** *முதலாம் முத்திரை*

---

***359.*** *இப்பொழுது, செல்வத்தின் ஆதிக்கம் அவன் கையில் வந்தவுடன் யூதர்களுடன் அவன் செய்த உடன்படிக்கையை அவன் எழுபதாவது வாரத்தின் பாதியின் மத்தியில் (கடைசி மூன்றரை வருஷத்தின் மத்தியில் - தமிழாக்கியோன்) முறிப்பானென்று தானியேல் கூறுகிறான். அதன்பின், சகோதரனே, அவன் என்ன செய்வான். அச்சமயம், உலகத்தின் செல்வமனைத்தும் அவன் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுள்ளதால், உலகிலுள்ள வாணிபமெல்லாம் அவன் கைக்குள் இருக்கும். இந்த சமயத்தில்தான், இரண்டு தீர்க்கதரிசிகள் காட்சியில் எழும்பி* ***1,44,000*** *பேரை அழைப்பார்கள். அதன்பின்பு என்ன நேரிடும்? வெளி.* ***13****-ல் கூறியுள்ள மிருகத்தின் முத்திரை போடப்படும். ஏனெனில் உலக வாணிபமெல்லாம் அவன் அதிகாரத்தில் இருக்கும். அதன்பின் என்ன சம்ப*

*விக்கும்? "அந்த முத்திரையிடப்பட்டவன் அல்லாது வேறு யாரும் விற்கவோ கொள்ளவோ முடியாது." என்ற மிருகத்தின் முத்திரை உள்ளே வரும். (சகோ.பிரான்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டினார் - ஆசி)*

***360.*** *கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவ்வமயம் சபையானது மகத்தான மூன்றரை வருட காலம் மகிமையில் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும். இது நிகழும்போது, நாம் இவ்வுலகில் இருக்கமாட்டோம்.*

***63-03-18*** *முதலாம் முத்திரை*

---

***279.*** *இப்பொழுது கவனியுங்கள். அவர்கள் அந்திக்கிறிஸ்துவால் கொல்லப்பட வேண்டும். அவன் கடைசியாக முறையாக சவாரி செய்யும்போது, யூதர்களுடன் அவன் செய்திருந்த உடன்படிக்கையை முறிக்கிறான். பாருங்கள்?*

*280.* இந்த *1,44,000* யூதர்கள் வெளிப் படுத்தல் *11*-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இரண்டு சாட்களின் மூலம் வெளியே அழைக்கப்படுகின்றனர். இப்பொழுது, அவர் கள் தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும் என்பதை ஞாபகங் கொள்ளுங்கள்.

*281.* இவ்விரண்டு சாட்சிகளும் தீர்க்க தரிசினம் உரைக்கவேண்டுமென்று நீங்கள் வேதத்தில் படித்திருக்கிறீர்கள். உங்களில் அதை எத்தனைபேர் படித்திருக்கிறீர்கள் (சபையார் 'ஆமென்" என்கின்றனர் - ஆசி) நிச்சயமாக, நாம் அனைவரும் வேதம் வாசிக் கும் பழக்கமுடையவராக இருக்கிறோம்.

*282.* அவர்கள் தானியேலின் எழுபது வாரங்களின் இரண்டாம் பகுதியில் தீர்க்க தரிசனம் உரைக்கின்றனர். அதுதான் கடைசி மூன்றரை வருடம்.

*283.* தானியேலின் எழுபது வாரங்களைக் குறித்து நாம் பேசியபோது முத்திரைகளின் இரகசியங்களைப் பற்றி நாம் தியானிக்கும்

*சமயத்தில் அது நமக்கு அவசியமாயிருக்கும். என்று நான் கூறினேன். ஏன் அவ்விதம் கூறினேன் என்று எனக்கே தெரியவில்லை. அது நமக்கு அவசியமாயிருக்குமென்று ஏதோ ஒன்று என்னிடம் சொன்னது. அது இப் பொழுது உண்மையாயிருக்கிறது. ஆம். பாருங்கள்?*

*284. கவனியுங்கள், தானியேலின் காலத் தில்... மேசியா வருவாரென்றும் அவர் தீர்க்கதரிசனம் உரைப்பாரென்றும் தானியேல் கூறினான் என்பதை நினைவில் கொள் ளுங்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு எழுபது வாரங்கள் விடப்பட்டிருந்தன. அந்த எழுபது வாரங்களின் மத்தியில் மேசியா சங்கரிக் கப்படுவார். அன்றாடக பலியும் நீக்கப்படும். நான் கூறுவது சரியா? (சபையார் "ஆமென்" என்கின்றனர் - ஆசி) ஆனால் இன்னமும் மூன்றரை வாரங்கள் நியமிக்கப்பட்டிருக்கின் றன.*

*இந்த காலகட்டத்தில் அவர் புறஜாதி மணவாட்டியை எடுத்துச் செல்வார்.*

***285.*** *இப்பொழுது, மணவாட்டி மேலே சென்றவுடனே, இரண்டு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலரிடம் எழும்புவார்கள். பாருங்கள்?*

***63-03-22*** *ஐந்தாம் முத்திரை*

---

***298.*** *தானியேலின் எழுபது வாரங்களின் பிற்பகுதியில் மேசியா சங்கரிக்கப்பட வேண் டும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அது அந்த எழுபது வாரங்களின் மத்தியில் நிகழும் ஒரு சம்பவமாகும். நல்லது, ஏழில் பாதி எவ்வளவு? (சபையார் "மூன் றரை" என்கின்றனர் - ஆசி) மூன்றரை. கிறிஸ்து எத்தனை வருடம் பிரசங்கித்தார்? (சபையார் 'மூன்றரை வருடம்' என்று பதிலுரைக்கின்றனர். அது சரி. அந்த ஜனங் களுக்கு இன்னும் எத்தனை வருடங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன? மூன்றரை வரு டங்கள்.*

***299.*** *இந்த மூன்றரை வருட காலத்திற்கு முன்பு புறஜாதி மணவாட்டி ஏழு சபையின் காலங்களில் தெரிந்து கொள்ளப்பட்டு, எடுக் கப்படுகின்றாள்.*

***63-03-22*** *ஐந்தாம் முத்திரை*

---

***303.*** *ஆகவே, இவர்கள் யாரென்பதை, கர்த்தருக்குச் சித்தமானால் நாம் இன்னும் சில நிமிடங்களில் கண்டுகொள்ளப் போகி றோம். அவர்கள் யாரென்பதை வேதம் நமக்கு அறிவிக்கின்றது. ஆம், நிச்சயமாக அது அறிவிக்கின்றது. பாருங்கள்?*

***304.*** *இப்பொழுது, கவனியுங்கள். அவர் கள் தீர்க்கதரிசனம் உரைக்கின்ற மூன்றரை வருடத்தின் பாதியில்... அவர்கள் ஆயிரத்து இருநூற்றறுபது நாட்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் என்று வெளிப்படுத்தின விசே ஷம் கூறுகின்றது.*

***305.*** *யூத நாட்கணக்கின்படி, அது தேவ னுடைய ஒழுங்கான நாட்கணக்கு (God's*

*Calendar)* ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள் மாத்திரமேயுண்டு. ஆனால் ரோமன் நாட் கணக்கு அவ்வாறல்ல. யூதருடைய நாட் கணக்கின்படி ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள் உண்டு.

***306.*** இப்பொழுது நாம் மூன்றரை வருடங்களை (நாற்பத்திரண்டு மாதங்களை) முப்பது நாட்களால் பெருக்கினால் நமக்குக் கிடைப்பது ஆயிரத்து இருநூற்றறுபது நாட் கள். "ஆயிரத்து இருநூற்றறுபது நாட்கள்" - சரியாக மூன்றரை வருடங்களாம். நல்லது, நீங்கள் அதை புரிந்து கொண்டீர்களா?

***307.*** இப்பொழுது, இது மிகவும் அழ காகப் பொருந்துகின்றது என்பதைப் பாருங் கள். அதில் எவ்வித தவறும் இல்லை. அவை சரியாக ஒன்றுடன் ஒன்று பொருந்துகிறது. கவனியுங்கள். இந்த இரண்டு தீர்க்கதரிசி களும் யூதரிடம் மூன்றரை வருட காலம் பிரசங்கிக்கின்றனர். அதன் விளைவால்

*1,44,000 பேர்கள் வெளியே அழைக்கப்படு கின்றனர்.*

*308. இவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் முறையே மோசேயும் எலியாவுமாம், பாருங் கள்? பாருங்கள்? இப்பொழுது கவனியுங்கள். அவர்களுடைய ஊழியத்தைக் கவனியுங்கள். இந்த தீர்க்கதரிசிகள் செய்வது என்னவென்று நீங்கள் கவனியுங்கள். அவர்கள் வேண்டும் போதெல்லாம் பூமியைச் சகலவித வாதை களால் வாதிக்க அவர்களுக்கு அதிகாரம் உண்டு." யார் அவ்விதம் செய்தது? மோசே, 'அவர்கள் ஊழியத் தின் நாட்களிலே மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர் களுக்கு அதிகாரமுண்டு. மூன்றரை வருட காலம் வானத்தை அடைத்தது யார்? (சபை யார், 'எலியா' வென்று பதிலுரைக்கின்றனர் - ஆசி). அங்கே அவர்களைப் பாருங்கள். அது அவர்களேயாகும். பாருங்கள், அது...*

*309. பாருங்கள், ஒரு மனிதன் மரித்த பிறகும் அவனுடைய பதவி மாறுவதில்லை.*

*அவனுடைய ஒப்பனை (make-up) மாறுவதில்லை. கவனியுங்கள் முன்பு...*

***63-03-22** ஐந்தாம் முத்திரை*

---

***197** இப்பொழுது இந்த செய்தியாளர்களை, வெளிப்படுத்தல்... **12**-ல் கூறப்பட்டுள்ள இந்த செய்தியாளர்கள் இந்த இரண்டு தீர்க்கதரிசிகளை கவனியுங்கள். அவர்கள் "பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று பிரசங்கம் செய்வார்கள். பாருங்கள்? பரலோக ராஜ்யமானது நிறுவப்பட இருக்கின்றது. அதுதான் தம் ஜனங்களாகிய யூதர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தானியேலின் எழுபதாம் வாரத்தின் கடைசி மூன்றரை வருட காலமாகும். தானியேலின் எழுபதாம் வாரத்தின் கடை பாகம் இதுவே அன்று நிரூபிக்க வேண்டுமானாயின்... அதைக் குறித்த ஒரு கேள்விக்கு நாளை நான் பதிலுரைப்பேன். பாருங்கள்?*

*198* இப்பொழுது எழுபது வாரங்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அது ஏழு வருடங்களாகும். ஏழு வாரங்களின் மத்தியில் மேசியா சங்கரிக்கப்படுவார். அவர் மூன்றரை வருட காலம் தீர்க்கதரிசனம் உரைத்து ஜனங்களுக்காக பலி செலுத்தப்படுவார். இன்னும் இஸ்ரவேலுக்கு மூன்றரை வருட கால நியமிக்கப்பட்டுள்ளது. மேசியா சங் கரிக்கப்படும்போது, யூதர்கள் குருடாக்கப் பட்டபடியால் அவரை மேசியாவென்று அவர்கள் கண்டு கொள்ளமாட்டார்கள்.

*63-03-23* ஆறாம் முத்திரை

---

*210* தானியேலின் எழுபது வாரங்களில் அடங்கியுள்ள மூன்றரை வருட காலத்தைப் பற்றி (நான் கூறினேன்.) நாம் அதைக் கண்டறிந்தோம்.

*211* அதை இன்னும் நான் விவரிக்க விரும்புகிறேன். ஏனெனில் இங்குள்ள சிலர் அதை நன்றாகக் கவனிக்கின்றனர். வேத

போதகன் என்ற முறையில் நான் நான் இதனைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

*212* அந்த எழுபது வாரங்கள் வருவதைக் கவனியுங்கள். தானியேல் யூதர்களின் முடி வில் அந்த நேரமானது வருவதை தரி சனத்தில் காண்கிறான். எழுபது வாரங்கள் நியமிக்கப்பட்டுள்ளதென்றும், அந்த ஏழாவது வாரத்தினில், அதன் மத்தியில் மேசியா பலியாக சங்கரிக்கப்படுவாரென்றும் அவன் கூறினான். அவன் கூறியவாரே அது நிகழ்ந் தது.

*213* அதன்பின்பு தேவன் புறஜாதிக ளுடன் தொடர்புகொண்டு அவருடைய நாமத்திற்கென்று ஒரு கூட்ட ஜனத்தைத் தெரிந்தெடுக்கிறார். அது முடிவு பெற்ற வுடன் புறஜாதி சபை மணவாட்டி மேலே எடுக்கப்படுகிறாள்.

*214* ஆகவே அவர் அதைச் செய்தபோது, அந்த புத்தியில்லாத கன்னிகை, சபையானது. மணவாட்டி மேலே சென்றுவிட்டாள். சபை

யானது புறம்பான இருளில் தள்ளப்படுகின்றது. "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்". அதே சமயத்தில் ஜனங்களின் மேல் உபத்திரவம் விழுகின்றது.

*215* உபத்திரவம் அவ்வாறு விழும்போது, வெளிப்படுத்தல் *11*-ம் அதிகாரத்தில் கூறப்பட்ட இரண்டு தீர்க்கதரிசிகள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர்களிடம் வருகின்றனர். அவர்கள் ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள் பிரசங்கிக்கின்றனர். பாருங்கள்? ஒரு மாதத்தில் முப்பது நாட்கள் என்னும் உண்மையான கணக்கின்படி அது மூன்றரை வருட காலமாகும். அதுதான் தானியேலின் எழுபதாம் வாரத்தின் கடைசி பாகம், எழுபதாவது வாரத்தின் கடைசி பாகம். பாருங்கள்?

தேவன் இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்களுடன் ஈடுபடுவதில்லை. இல்லை ஐயா.

*63-03-23* ஆறாம் முத்திரை

*227* "புறஜாதியின் நாட்கள் என்னப்படுகின்றன. அது அழிவால் நிரம்பி உள்ளது" உபத்திரவ காலம் மிகவும் அருகாமையில் உள்ளது.

*228* ஆகவே சரியாக இங்கே முத்திரைகள் உடைக்கப்படுகின்றன. சபையும் பறந்து செல்ல ஆயத்தமாயிருக்கிறது.

*229* அவள் சென்றவுடன், உபத்திரவ காலம் தொடங்கும். அப்பொழுது தேவன் கீழே வந்து அங்கிருந்து ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரை வெளியே இழுத்துக் கொள்வார். ஆமென். ஓ, அது பரிபூரணமாயுள்ளதே!' முத்திரைகள் திறக்கப்படுவதன் மூலம் இது எந்தக் காலத்தில் சம்பவிக்கின்றது என்பதை அறியலாம். இப்பொழுது இது ஜனங்களுக்கு அளிக்கப்படும் கடைசி மூன்றரை வருட காலமாகும். நீங்கள் கவனிப்பீர்களானால் இந்தக் கடைசி மூன்றரை வருட காலத்தில் தேவன் ஒரு

*இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களை அழைப்பார்.*

***63-03-23** ஆறாம் முத்திரை*

---

***305** இயற்கையை அவர்கள் தடை செய்கின்றனர். இப்பொழுது மழை பெய் யாதபடிக்கு எலியா எவ்வளவு காலம் வானத்தை அடைத்தான்? (சபையோர், "மூன் றரை வருடங்கள்" என்று கூறுகின்றனர். - ஆசி.) அங்கே சரியாக இருக்கின்றது. தானி யேலின் எழுபதாம் வாரத்தின் பாகம் எவ் வளவு காலம் நீடிக்கின்றது? ("மூன்றரை வருடங்கள்".] அங்கே சரியாக இருக்கின்றது.*

***63-03-23** ஆறாம் முத்திரை*

---

***36.** ஏனெனில் எலியா என்னும் பாடுள்ள மனிதன் மலையின்மேல் தேவனுடைய சமூகத்துக்கு முன்பாக நின்று வானத்திலிருந்து*

எவ்வாறு அக்கினியை வரவழைத்து, அதன் பின்பு மழையையும் வரவழைத்து, வேறொரு சமயத்தில் மூன்றரை வருடம் மழை பெய் யாதபடி வானத்தை யடைத்து, அந்நாளிலே மறுபடியும் மழைவரக் கட்டளையிட முடி யும்? அவன் தேவனுடைய அபிஷேகத்தைப் பெற்றவனாய், பாகாலின் நானூறு தீர்க்க தரிசிகளைக் கொலை செய்யத் தைரியம் கொண்டு, அதே சமயத்தில் அவனைக் கொல்லச் சபதமெடுத்திருந்த யேசேபேல் என்னும் ஒரு ஸ்திரீக்கு அஞ்சி, ஜீவன் தப்ப அவன் ஏன் வனாந்தரத்துக்கு ஓடிப்போக வேண்டும்? பாருங்கள்? தேவனுடைய பிரசன்னத்தையும், அங்கு நடந்த அந்தப் பெரிய அற்புதத்தையும் காண ஆகாபும் அவனுடைய ஆட்களும் அங்கே இருந்தனர். பாருங்கள், அவனுடைய ஆவியானவர் அவனை விட்டு அப்பொழுது சென்றிருக்க வேண்டும். அவன் தன் சுய ஞானத்தைக் கொண்டு எதையும் சிந்திக்க இயலாமலிருந்

*தான். அவன் எவ்விதம் சிந்திக்கவேண்டு மென்று அறியாதவனாயிருந்தான், பாருங்கள்.*

*63-03-24E ஏழாம் முத்திரை*

---

*83. இவர்களுக்கும், சபையின் காலங்க ளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. அவர்கள் முற்றிலும் இஸ்ரவேல் ஆவர். இன்னும் சில நிமிடங்களில் அவ்வாக்கியங்களைப் படிக்கப் போகின்றோம். இப்பொழுது, ஆறாவது முத்திரை... இப்பொழுது இந்த இடைவெளி முத்திரைகள் இடையேயுள்ள இந்த 1,44,000 யூதர்கள், சபையானது எடுக்கப்பட்ட பின் னர், உபத்திரவ காலத்தில் அழைக்கப்பட்டு முத்திரிக்கப்பட்டவர்கள். பாருங்கள்? எனவே அவர்களுக்கும் சபையின் காலங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. இது வேதவாக் கியங்களுடன் அருமையாகப் பொருந்து கின்றது. தானியேல் கூறின கடைசி மூன்றரை வாரங்கள் தானியேலின் "ஜனங்களுக்கு*

*அளிக்கப்பட்டுள்ளன. புறஜாதிகளுக்கல்ல. தானியேலின் 'ஜனங்களுக்கு, " தானியேல் ஒரு யூதன்.*

*63-03-24E ஏழாம் முத்திரை*

---

***93.*** *வேதத்தில் கூறிய தானியேலின் மூன்றரை வாரங்களுடன் எவ்வளவு நன்றாகப் பொருந்துகிறது என்று இப்பொழுது பாருங்கள்.*

*63-03-24E ஏழாம் முத்திரை*

---

***108.*** *இப்பொழுது யேகோவா சாட்சி குழுவைச் சார்ந்த நண்பர்களே, இதைப் புரிந்து கொள்ளுங்கள். 1,44,000 பேருக்கும் மணவாட்டிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இந்த உங்கள் கருத்தை ஆதரிக்க வேதத்தில் எந்த பகுதியுமில்லை. இல்லை ஐயா. அவர்கள் மணவாட்டியல்ல, யூதர்கள் -*

தானியேலின் எழுபது வாரங்களின் கடைசி பகுதியில் தோன்றும் மூன்றரை வருட காலங்களில் அழைக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டவர்தாம் இவர்கள்.

*63-03-24E* ஏழாம் முத்திரை

---

*185.* இப்பொழுது, "அவர். அந்த யூதர்கள் அங்கே துளிர்விடுகிறதைக் காண் கிறீர்கள் அல்லவா?" இஸ்ரவேல் தன் சொந்த நாட்டிற்குத் திரும்பும்போது, சபையானது எடுக்கப்படுதலுக்கு ஆயத்தமாயிருக்கும். அதன் பின்பு பழைய உலகம் முடிய மூன்றரை வருட காலமேயுண்டாகும். அது பிறகு வெறுமையாகி, புதிய பூமிக்கு ஆயிர வருட அரசாட்சி காலம் வரும். "சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார்" என்றார். பூமியில் ஆயிரம் வருடம் தேவனுடைய பார்வைக்கு ஒரு நாளாயிருக்குமானால், மூன்றரை வருட காலம் தேவனுடைய கணக்கின்படி சில

வினாடிகளேயாகும். எனவே, தான் அவர், "அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார்" என்றார் (ஆங்கில வேதம், *[it is near, even at the doors)* என்கின்றது - தமிழாக்கி யோன்).

***63-03-24E*** *ஏழாம் முத்திரை*

---

***223.*** இயேசு, தானியேலின் "அருவருப் பைக்' குறித்து கூறினபொழுதும், இன்னும் மற்றவையையும் நீங்கள் அறிவீர்கள். "வரப் போகிற அந்த மகா பிரபு - அவர் ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்", என்பது அந்த மூன்றரை வருடங்களாகும். இயேசு சரியாக அதைத் தான் பிரசங்கித்தார். அவர் யூதரிடம் தனியராகவே வந்தார் - அதன் பின்பு அவர் ஜனங்களுக்காக சங்கரிக்கப்படு வார் - ஜனங்களுக்காக பலியாவார். "பாழாக்கும் அருவருப்பை" - முகமதியர் ஓமர் மசூதியை

*அங்கு கட்டினார்கள். "அவர்கள் எருசலே மின் மதில்களை மிதிப்பார்கள்" (வ்யூ! எதுவரையிலும்?) 'புறஜாதிகளின் யுகம் நிறை வேறும் வரையிலும்". அப்பொழுது அவர் யூதரிடம் திரும்ப வருவார். அங்கேதான் ஆர்மகெதோன் யுத்தமானது... தேவன் புற ஜாதிகளின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை அவருடைய மணவாட்டியை அழைத்தார். கவனியுங்கள். ஆம், ஐயா. அங்கு இன்னும் நிறைவேண்டிய ஒரு லட் சத்து நாற்பத்த நான்காயிரம் பேர் (1,44,000) மீட்கப்பட்ட யூதராவார்கள். இவைகள் யாவும் ......*

*224. அதன்பின் சபையானது மேலே எடுக்கப்பட்டபிறகு, வெளிப் படுத்தல் 11ல் மோசேயும், எலியாவும் தோன்றி இயேசு கிறிஸ்துவை அவர்களுக்கு பிரசங்கிக்கின்றனர். சபை மேலே எடுக்கப்படுவதற்கென எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது, பரிசுத்த ஆவி புறஜாதியாரிட மிருந்து எடுக்கப்படுகிறது.*

*ஆகவே மீதம் உள்ள யூதர்களுக்கு மூன்றரை வருடம் பிரசங்கம் செய்யப்படுகிறது, ஏனெனில் அவர் "உன் ஜனத்தின் மேல், எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் நடுவில் மேசியா சங்கரிக்கப்படுவார்," என்றான். அவர் எடுக்கும் போது, புறஜாதிகளுக்கு ஒரு இடம் அளிக்கப்படுகிறது, பிறகு அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிக்கப்பட இன்னும் மூன்றரை வருடங்கள் உள்ளன.*

***53-07-29** கேள்விகளும் பதில்களும் COD #1*

---

***150.** அது சரி. இயேசு, ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பிறகு தண்ணீரை விட்டு வெளியே வந்து நேராக, அவர் நாற்பது பகல் மற்றும் இரவுகளுக்கு பிசாசினால் சோதிக்கப்படும்படியாக ஆவியானவர் அவரை வனாந்திரத்திற்குள் வழி நடத்தினார். அவர் அங்கே நாற்பது பகல் மற்றும் இரவுகளில்*

*சோதிக்கப்பட்டார். அவர் உபவாசித்தார். அவர் வெளியே வந்தார். அவர் தம்முடைய உபவாசத்தை விட்டு வெளியே வந்த போது பிசாசு அவரை சோதித்தான். அவர் பிசாசை தேவனுடைய வார்த்தையினாலே எதிர்த்து, தம்முடைய ஊழியத்திற்குள் பிரவேசித்து, வேத வசனங்களின்படி மூன்றரை ஆண்டுகள் பிரசங்கித்தார்.*

***151.*** *கவனியுங்கள், அவர் மூன்றரை ஆண்டுகள் பிரசங்கித்து அந்த நேரத்திலே, அவர் பலியாக சங்கரிக்கப்படுவார் என்று தேவன் தானியேலில் பேசியிருக்கிறார். அது அவ்விதமே சரி. அவர் உலகம் தோன்று வதற்கு முன்பே நியமிக்கப்பட்டார். அது சரி.*

***54-01-03E*** *கேள்விகளும் பதில்களும் COD #3*

---

***112*** *அதற்கு அவள், "பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம்*

எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். எனவே அதை ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன்" என்றாள். பண்டைய மாதிரியான இந்தியரின் முறையானது இரண்டு விறகுகளை ஒன்றுக்கு ஒன்று குறுக் காக வைத்து அதன் மத்தியில் நெருப்புண் டாக்கி, அதை தள்ளிவிட்டுக்கொண்டே எரிப்பதாயிருந்தது. அந்தவிதமாக அநேகர் கூடாரமிட்டுத் தங்கும் முகாம்களில் நெருப் புண்டாக்குவர். மேலும் அவள், "நான் எனக்காகவும், என்னுடைய பையனுக்காக வும், என்னுடைய குழந்தைக்காகவும் அந்த சிறு அடையைச் சுடப் போகிறேன். பின்னர் நாங்கள் அதைச் சாப்பிட்டுவிட்டு, மரிக்கப் போகிறோம்" என்றாள். அங்கே மூன்றரை வருட காலமாக பஞ்சம் உண்டாயிருந்தது. எங்குமே தண்ணீர் இல்லாதிருந்தது.

## *57-08-25E எபிரெயர், இரண்டாம் அதிகாரம் #2*

---

*517* இப்பொழுது கவனியுங்கள். யூதர்கள் காட்சியிலிருந்து எடுக்கப்படுவர் என்று மத்தேயு *24*-ல் நம்முடைய கர்த்தராகிய இயேசுவினால் அது கூறப்பட்டது. முன்பு இருந்த பண்டைய தீர்க்கதரிசிகளில், தானி யேல் கூறினான், அவன், "எழுபதாவது வாரம் இன்னும் யூதர்களுக்கு குறிக்கப்பட் டிருக்கும். (பிரபு) வாகிய மேசியா வந்து, எழுபதாவது வாரத்தின் மத்தியில் தீர்க்க தரிசனம் உரைப்பார், அது ஏழு வருடங் களாயிருந்தது, அந்த வாரத்தின் பாதியில் அவர் சங்கரிக்கப்படுவார். அது எவ்வளவு பரிபூரணமாயிருந்தது என்று பாருங்கள், இயேசுவானவர் சரியாக மூன்றரை வருடங் கள் பிரசங்கித்தப் பிறகு சிலுவையில் அறை யப்பட்டார். ஆனால் மூன்று. அது இங்கே இந்த மற்ற கேள்வியில் வருகிறது. யூதர்

களுக்கு, இன்னும் அவர்களுக்கு மூன்றரை வருடங்கள் உள்ளன. அது இருக்கத்தான் வேண்டும்.

*57-10-02 எபிரெயர் நிருபத்தின் பேரிலான COD #6*

---

***521*** இப்பொழுது, புறஜாதிகள். இப் பொழுது கவனியுங்கள், இந்த யூதர்களுக்காக இன்னும் மூன்றரை வருடங்கள் விடப்பட் டிருக்கின்றன். இப்பொழுது, புறஜாதியாரின் யுகம் முடிவுறும் வரை எருசலேம் நகரம் புறாஜாதிகளால் மிதிக்கப்படும் என்று இயேசு கூறினார். (இப்பொழுது ஜனங்களாகிய நீங்கள் யுகங்களில் நம்பிக்கைக் கொள்வ தில்லை, அதைக் குறித்து என்ன?) புறஜாதி யுகம் முடிவுறும் வரை... புறஜாதி யுகம் முடிவுறும் போது (புறஜாதியாரின் காலம் முடிவுறும்போது), அப்பொழுது அந்த நகரம் யூதர்களிடத்திற்கு திரும்ப அளிக்கப்படும்.

*இயேசு அந்த சந்ததியைக் குறித்து அதைக் கூற முன்னதாகவே சென்றார். அவர், "நீங்கள் வெளியே போய், அத்தி மரம் துளிர் விடுதையும், மற்ற எல்லா மரங்களும் துளிர் விடுவதையுங் காணும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்" என்றார். மேலும், "அப்படியே இவைகள் சம்பவிக் கிறதை நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகா தென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்." என்றார்.*

***57-10-02*** *எபிரெயர் நிருபத்தின் பேரிலான*
*COD #6*

---

***714*** *இப்பொழுது இந்த யூதர்களுக்கு மூன்றரை வருடம் வாக்களிக்கப்பட்டிருக் கிறது. எத்தனை பேருக்கு அது தெரியும்?*

எழுபதாவது வாரம் வாக்களிக்கப்பட்டிருந்தது. அதில், "மேசியா வந்து அந்த வாரத்தின் மத்தியிலே சங்கரிக்கப்படுவார்" என்று கூறப்பட்டிருந்தது. மூன்றரை வருடங்கள் கிறிஸ்து பிரசங்கித்து, சரியாக மூன்றரை வருடத்தில், கொல்லப்பட்டார், மூன்று வருடங்களும் ஆறு மாதமும் அவர் பிரசங்கித்தார்.

**715** அதன் பின்னர் பாழாக்குகிற அருவருப்பு உண்டாகிறது, முகமதியரின் பள்ளி வாசலானது பரிசுத்த ஸ்தலத்தில் கட்டப்பட்டது, அது அங்கே நிற்கும் என்று தேவன் கூறினவிதமாகவே இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரே அது சம்பவித்தது. தீர்க்கதரிசி அதைப் பார்த்தான், அதைக் கண்டான், "அவர்கள்... புறஜாதி யுகம் முடிவடையும் வரையில் அது புறஜாதிகள் அங்கே உடைமையாயிருப்பர்" என்று கூறினான்.

**716** இப்பொழுது இன்னும் மூன்றரை வருடங்கள் வாக்களிக்கப்பட்டிருக்கின்றன.

*நீங்கள் கவனிப்பீர்களேயானால், வெளிப்படுத்தின விசேஷம் **11-**ன் படியான இந்த சாட்சிகள் ஆயிரத்திருநூற்றறுபது நாட்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; சரியாக மூன்றரை வருடங்கள். இப்பொழுது அவர்கள் இரட்டு வஸ்திரமுடுத்தியிருந்தனர். இப்பொழுது அவர்களுடைய ஊழியத்தையும், அவர்கள் என்னவாயிருக்கிறார்கள் என்பதையும் கவனியுங்கள். இப்பொழுது, இந்த இரண்டு சாட்சிகளும் கொல்லப்படுகின்றனர்.*

***57-10-06** எபிரெயர் நிருபத்தின் பேரிலான **COD #7***

---

***719** இந்த விழா பரலோகத்தில் நடந்து கொண்டிருக்கையில், மணவாட்டி, புறஜாதி மணவாட்டி பிரபுவை (தேவனுடைய குமாரனை) மகிமையில் விவாகம் செய்து கொள்கிறாள்; அவர்கள் விவாகம் செய்து*

*கொண்டு, அங்கே மூன்றரை வருடங்கள் நிகழ்கிற... மோசேயும், எலியாவும்...*

***57-10-06*** *எபிரெயர் நிருபத்தின் பேரிலான COD #7*

---

***727*** *ஆகையால் அவர்கள் திரும்பி வந்து சரியாக மூன்றரை வருடங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் கீழே பிரசங்கிக்கும்போது, புறஜாதிகளிடத்திலிருந்து ஆசீர்வாதங்கள் எடுக்கப்பட்டிருக்கும், (சபையானது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும்); குளிர்ந்துபோன சம்பிரதாயமான சபையோ கம்யூனிஸ்டுகளினாலும், ரோம் அரசாங்கத்தாலும் நாய்களைப் போல வேட்டையாடப்படும், அவர்கள் வேட்டையாடப்படும்போது கொல்லப்படுவர். அப்பொழுது அவர்கள் கொல்லப்படுகின்றனர்; இந்தத் தீர்க்கதரிசிகள் மூன்றரை வருடங்கள் பிரசங்கித்தப் பின்னர், அவர்கள் மகா நகரத்தின் விசாலமான*

*வீதியிலே கொல்லப்பட்டனர், அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறை யப்பட்டார். அது ஞானர்த்தமாய் சொல் லப்பட்டது, அது முன்னர் எருசலேமா யிருந்தது; பாருங்கள் முன்பு எருசலேம்.*

***728*** *அவர்கள் மூன்று இராப் பகல் வீதியிலே கிடந்தனர். அதன்பின்னர் மூன் றரை நாளைக்குப் பின்பு ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் எழும்பி நின்றனர். அவர்கள் மற்ற சாவுக்கேதுவானவர்களைப் போலவே மரிக்க வேண்டியதாயிருந்தது, அவர்கள் அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது. அவர்கள் இந்த இரண்டு பிரசங்கிமார்களைக் கொன்ற போது...*

***729*** *அவர்கள் தவறானதற்கு எதிராக பிரசங்கித்தனர், அவர்கள் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தனர். யார் அதைச்*

*செய்தது? பார்த்தீர்களா? அவர்கள் வானத்திலிருந்து வாதைகளைக் கொண்டுவந்து, தங்களுக்கு வேண்டும்போதான எந்த நேரத்திலும்.. அவ்வளவு துரிதமாக செய்து பூமியை வாதித்தனர். அவர்கள் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தனர். தங்களுக்கு வேண்டும்வரை மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைத்தனர். அது யாராயிருந்தது? சரியாக மோசேயும், எலியாவுமே. அவர்களே இரண்டு சாட்சிகளாயிருக்கிறார்கள்.*

***57-10-06** எபிரெயர் நிருபத்தின் பேரிலான COD #7*

---

***3** "நான் உங்களுடன் நவமாய் என் பிதாவின் ராஜ்யத்தில் இதை புசிக்கும் வரைக்கும், இனி ஒரு போதும் நான் திராட்சரசத்தைப் பானம் பண்ணுவதுமில்லை, புசிப்பதுமில்லை. அது தான் கலியாண*

விருந்து. மூன்றரை ஆண்டு காலம் அந்திக் கிறிஸ்து உலகில் அரசாண்டு முடிக்கிறான். முழு உலகமும் அழிக்கப்படுகின்றது. யூதர்கள் வெளியே அழைக்கப்படுகின்றனர். (கிறிஸ்து வாகிய) யோசேப்பு தம்மை யூதர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். யோசேப்பு தன்னை தன் யூத சகோதரர்களுக்கு வெளிப்படுத்தின போது, ஒரு புறஜாதியும் கூட அப்பொழுது அங்கில்லை என்பதை நினைவில் கொள்ள வும்... அந்த வரலாறு உங்களுக்குத் தெரியும். எல்லா வகையிலும் யோசேப்பு கிறிஸ்து வுக்குப் பரிபூரண முன்னடையாளமாக திகழ்ந்தான். யோசேப்பு ஆள் அனுப்பி தன் சகோதர்களை அழைத்தபோது, அவர்கள் வந்தனர். அவன் சிறிய பென்யமீனை உற்று நோக்கினான்... அவர்கள், "என்ன இவன்? நாம் நம்முடைய சகோதரனாகிய யோசேப் பைக் கொன்றிருக்கக் கூடாது" என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டனர். அவ்வாறே கிறிஸ்து தம்மை யூதர்களுக்கு வெளிப்படுத்தும் போது, யூதர்கள் தாங்கள்

இழைத்த தவறை உணருவார்கள். யோசேப்பு துயரம் மிகுந்தவனாய் இருந்த காரணத்தால் அவனுக்கு, அழ வேண்டுமென்று தோன் றினது. எனவே அவன் தன் மனைவி பிள்ளைகள், காவல்காரரர் அனைவரையும் அரண்மனைக்குப் போகும்படி உத்தரவிட் டான். அது முற்றிலும் உண்மை. பின்பு யூதர்களின் முன்பில் அவன் தனிமையாக நின்று கொண்டு, "நான் தான் சகோதர னாகிய யோசேப்பு. நான் உங்கள் சகோ தரன்" என்று கூறி தன்னை வெளிப் படுத்தினான். அப்பொழுது அவர்கள் நடுக்க முற்று, "அவனைக் கொல்ல முயன்றோமே. இப்பொழுது அதற்குரிய பலன் நமக்கு கிடைத்துவிடும். நமது சகோதரனை நாம் கொன்றுவிட்டோம் என்று எண்ணினோமே. அவன் இப்பொழுது பெரிய ராஜாவாக இருக்கிறானே" என்றனர்.

அவனோ, "ஜீவனைக் காக்க வேண்டும் என்னும் நோக்கத்திற்காகவே தேவன் இப்படி

செய்தார்" என்றான். புறஜாதியாராகிய நம்மை இரட்சிக்க வேண்டுமெனும் அந்த நோக்கத்திற்காகவே தேவன் அப்படி செய் தார். ஆனால் புறஜாதிகள் அரண்மனையில் இருந்தனர். அல்லேலூயா யோசேப்பு தன் சகோதரரால் புறக்கணிக்கப்பட்டு ஒரு புறஜாதி மணவாட்டியைக் கொண்டான் - யூத மணவாட்டியல்ல. சரி.

*60-05-18 புத்திரசுவிகாரம் #2*

---

*31* அதன்பிறகு, இங்கே வலுசர்ப்பமானது வருகிறது. அது ரோம் குருக்களாட்சியாகும். அப்பொழுது ஏற்கனவே சபையானது எடுத்துக் கொள்ளப்பட்டு, மகிமையில், அங்கே மூன்றரை ஆண்டுகள் கலியாண விருந்தில் இருக்கிறது. அதன் பிறகு வலு சர்ப்பம் வருகிறது. வலுசர்ப்பம் எப்பொழு தும் ரோமாபுரியையே குறிக்கிறது. அது சிவப்பான வலுசர்ப்பமாகும்.

அது அது தான் என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்தும்படி, வெளிப்படுத்தின விசேஷம் 12ம் அதிகாரத்தில், வலுசர்ப்பமானது ஸ்திரீயின் மேல் கோபமடைந்திருந்தது. அந்த ஸ்திரீயானவள் சகல ஜாதிகளையும் இருப்புக் கோலால் அரசாளும் ஆண்பிள்ளையை பெற்றெடுக்கவிருந்தாள். வலுசர்ப்பமானது தன் வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றிவிட்டு, ஸ்திரீயின் வித்தாயிருக்கிற மீதியாயிருக்கிறவர்களோடு யுத்தம் பண்ணப்போனது. ஆனால் இந்த சிவப்பான வலுசர்ப்பமானது,

முதலில் இந்த ஸ்திரீக்கு முன்பாக நின்றது. ஸ்திரீயானவள் இந்தக் குழந்தையை பெற்று எடுத்தவுடனேயே, அக்குழந்தையை பட்சிக்கும்படி அது ஆயத்தமாக நின்றது. இஸ்ரவேல் என்ற ஸ்திரீயாகிய இஸ்ரவேல் சபைக்கு முன்பாக அவள் பெற்றெடுக்கப் போகும் குழந்தையாகிய இயேசுவை பட்சிக்கும்படி நின்றது யார்? ரோமாபுரிதான் அது, ஏரோது இரண்டு வயதுக்குட்பட்ட குழந்

தைகளையெல்லாம் கொன்று போடும்படி உத்தரவு பிறப்பித்தான்.

அதன்படி அத்தேசம் முழுவதிலும் எபிரெயக் குழந்தைகளையெல்லாம் வெட்டிக் கொலை செய்தார்கள். அவ்வாறே இயேசுவுக்கு முன்னடையாளமாயிருந்த மோசேயையும் பிடித்துக் கொலை செய்ய பார்வோன் முயன்றான். அவன் குழந்தைகளையும் கொன்றான். ஆனால் மோசேயை அவனால் பிடிக்க முடியவில்லை. ஓ - ஓ - ஓ, தேவன் அவர்களை எவ்வாறு மறைப்பது என்பதை அறிவார்!

***60-12-11M*** *பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்*

---

***59. 1914****ல் உலகம் யுத்தத்திற்கு சென்றது. அது முதற்கொண்டு அவர்கள் சமாதானமாயிருக்கவில்லை. தொடர்ச்சியாக அவர்கள் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.*

இன்னமும் அவர்கள் அதே காரியத்தைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள்? அத் தூதர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்" ஓ தேவனே, இரக்கமாயிரும்! நான் தரிசனத்தில் கண்ட அம்மகத்தானதை அவர்கள் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். (முழுவதும் அழிவுக் குள்ளாகின்றது). அது வந்து அழிக்கிறவரை யிலும், அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளாதபடிக்கும், இஸ்ரவேல் தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்று ஒருமித்து கூடுகிற வரையிலும், செய்தியானது இஸ்ரவேலுக்குச் சென்று, பரிசுத்த ஆவி யாகிய முத்திரையினால் அவர்கள் முத்திரை யிடப்படுகிற வரையிலும், அணுகுண்டுகளை யும், யுத்தங்களையும் அத்தூதர்கள் தடுத்து நிறுத்தி பிடித்துவைத்திருக்கிறார்கள்.

பாருங்கள், புறஜாதியார் மத்தியிலிருந்து அவரது நாமத்திற்கென ஒரு கூட்டம் மக்கள் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு; இந்த காலத்தில்

தான் அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். அதன் பிறகு, இஸ்ரவேல் மட்டுமே, மூன்று வருடங்கள் ஆறு மாதங்கள் அளவுக்கு செய்தியை பெறுகிறது. தானியேல் அவ்வாறு உரைத்தான். அவர்கள் அவ்வாறு செய்வார் கள், அங்கே அது இருக்கும் என்றும் உரைத்திட்டான். அங்கே 70 வாரங்கள் இருந்தது.

ஏழு ஆண்டுகள் யூதர்களுக்கான இரட் சிப்புக்காக விடப்பட்டுள்ளது என்று கூறப் பட்டிருந்தது. அந்த எழுபதாவது வாரத்தின் நடுவிலே அதிபதியாகிய மேசியா, அவர் தான் கிறிஸ்து, வந்திடுவார், அவர் அப்பொ ழுது சங்கரிக்கப்படுவார் என்று தானியேல் கூறினான். இயேசு மூன்றரையாண்டுகள் பிரசங்கத்தார். அதன்பிறகு அவர் சங்கரிக் கப்பட்டார். அன்றாட பலி அத்தோடு நிறுத்தப்பட்டது. அதை தானியேல் கூறியுள் ளான். சரி.

*60 அதன்பிறகு, ஒரு இடைப்பட்ட காலமானது புறஜாதியாருக்கு கொடுக்கப் பட்டது. அவர்கள் இந்த காலத்திற்குள் வருகிறார்கள். பிறகு, யூதர்களுக்கு இன்னும் மூன்றரை ஆண்டுகள் மீதியாக விடப்பட் டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தை நாம் எடுத்துக் கொண்டால், நாம் அங்கே சரியாக முடிவு காலத்தைக் குறித்து தெளிவாகப் பார்க்கலாம்.*

*(சபையானது வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம் வரையிலும் தோன்றவே யில்லை. அந்த முடிவின் கட்டத்தில் மோசே யும், எலியாவும் மீண்டும் தோன்றி, யூதர் களுக்கு பிரசங்கிக்கின்றனர். அந்த ஆவியி னால் அபிஷேகம் பண்ணப்பட்ட இரு மனிதர்களோ, அல்லது சாட்சாத் அவர்கள் இருவருமோ வருவார்கள். அவர்கள் இரு வரும் மரிக்கவில்லை. ஆகவே, அவர்கள் அவர்களை கொன்று விட, அவர்களது சரீரங்கள் சோதோம் என்னப்பட்ட தெருவில்*

கிடக்கும். அங்கே நமது கர்த்தரும் சிலுவையில் அறையப்பட்டார். அது எருசலேமாகும். மூன்று நாட்களுக்குப் பிறகு, ஜீவன், அதாவது ஜீவ ஆவியானது அவர்களுக்குள் வந்து, அவர்கள் உயிரோடெழும்பி, மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அப்பொழுது மூன்றிலொரு பங்கு பூமியானது வெடித்துச் சிதறியது. அவர்கள் யூதர்கள் மத்தியில் அற்புத அடையாளங்களைச் செய்கிறார்கள்.

*60-12-11M* பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

---

*86* அனைத்து சபைகளின் சமஷ்டி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது அவர்கள் யாவரையும் ஒருங்கிணைத்து, யூதர்களையும் இந்த சபைகளின் சங்கத்தினுள், சமஷ்டிக்குள், கொண்டு வருவார்கள். அவர்களை அவர்களுடைய ஆலயத் தொழு

கைக்கு வரும்படி செய்து, வேதத்திலிருந்து கர்த்தர் உரைப்பது என்னவென்றால் என் பதை மீண்டும் ஏற்படுத்துவார்கள். அவர்க ளுக்கு அவர்களுடைய சொந்த சபை உண் டாயிருக்கும்.

இபொழுது அவர்கள் என்னவாயிருக்கி றார்கள்? இப்பொழுது நான் புதியதாக தெரிந்து கொண்டேன். அவர்கள் இப்பொ ழுது ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட் டுள்ளனர். அது சரிதானே? ஆனால் இன்ன மும் அவர்களுக்கு ஆலயத்தொழுகை ஏற்பட வில்லை. அவர்கள் ஆலயத் தொழுகையை ஏற்படுத்திக் கொள்ளும் போது, சபையானது இங்கிருந்து போய்விட்டிருக்கும். தேவன் அப்பொழுது யூதர்களோடு ஒரு தேசமாக இடைபட்டுக் கொண்டிருப்பார். பிறகு அவர்கள் இந்த சமஷ்டி அமைப்புக்குள் கொண்டு வரப்படுகையில், ரோமாபுரியானது எழுபதாவது வாரத்தில் மீதி பாதியில் அந்த மூன்றரை வருஷத்தில் அவர்களோடு உள்ள

உடன்படிக்கையை முறித்துப்போடும். பின்பு பாழாக்கும் அருவருப்பை முடிவு பரியந்தமும் அவன் பரப்பிக் கொண்டேயிருப்பான். அப்பொழுது அவன் ப்ராடெஸ்டெண்டுகள், யூதர் ஆகிய இரு சாராரையுமே உபத்திர வப்படுத்துவான்; அவ்வேளையிலே இரண்டு தீர்க்கதரிசிகள் எழும்பி அவர்கள் தீர்க்கதரி சனம் சொல்லி வரும் நாட்களிலே பூமியிலே மழை பெய்யாதபடி பூமியை சபிப்பார்கள்; இன்னும் வானத்திலிருந்து அக்கினியை வர வழைத்தல் போன்றவைகளையெல்லாம் அவர் கள் செய்வார்கள். நீங்கள் சற்று பொறுத் திருங்கள். நாம் கற்றுக் கொள்வதற்காக இங்கே ஏராளமான விஷயங்கள் வைக்கப் பட்டு இருந்து கொண்டிருக்கிறது.

*61-07-30E தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறுவிதமான நோக்கங்கள் #2*

***159.*** *ஒரு மனிதனின் செய்தி மூன்று வருடங்களுக்கு மாத்திரமே நிலைத்து நிற்கிறது என்று புள்ளி விவரங்கள் கூறு கின்றன, பிறகு தேவன் அவனை அழைக்கும் வரை அவன் தன்னுடைய புகழின் பேரிலே வாழ்கின்றான். அது கிறிஸ்துவின் முதற் கொண்டே அவ்விதமாகத் இருந்து வருகிறது, அவருடையது மூன்றரை வருடமாகும், பாருங்கள். அதற்கு பின்பு அவ்விதமாகத்தான் இருக்கின்றது, ஸ்பர்ஜன், நாக்ஸ், கால்வின், அதற்கு பிறகு... அவனுடைய தீ எரிந்து போகிறது, அவன் தன்னுடைய கடந்த கால புகழின் பேரிலே வாழ்கின்றான். அவன் தீயவனாக இருந்தானெனில் அவனுடைய கிரியைகள் அவனைப் பின்தொடரும்; அவன் சரியான ஒருவனாக இருந்தானெனில் அவனுடைய கிரியைகள் அவனைப் பின்தொடரும். அவ்வளவு தான்.*

***62-05-27*** *கேள்விகளும் பதில்களும் COD* ***#15***

***62*** *முதலில் புறஜாதி சபை எடுக்கப் பட்டாக வேண்டும். பின்பு யூதர்களுக்கு தானியேலின் எழுபது வாரத்தின் கடைசி பாகம் நிறைவேறும். தீர்க்கத்தரிசனத்தின்படி எழுபது வாரங்களின் முடிவில் அதாவது மூன்றரை வருட முடிவில் மேசியா கொல் லப்பட்டார். இன்னமும் மூன்றரை ஆண்டு கள் இருக்கின்றன. பின்பு வெளிப்படுத்தல் புத்தகம்* ***11-****ஆம் அதிகாரத்தில் இருக்கின்ற இரண்டு தீர்க்கதரிசிகள் பூமிக்கு வந்து யூதர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். அப்பொழுது சபை எடுக்கப்பட்டிருக்கும்.*

***63-01-16*** *சாயங்கால தூதன்*

---

***223.*** *இப்பொழுது, பாருங்கள், இங்கு எங்கோ உள்ள. ஒருவருக்கு அதன் பேரில் ஒரு கேள்வி. உள்ளது என்று எனக்குத் தெரியும். அவர், "சகோ.பிரான்ஹாமே, அந்த*

தானியேலின் எழுபது வாரங்களின் பேரில் நீங்கள் தவறு செய்து விட்டீர்கள். இன்னும் ஏழு வாரங்கள் இருக்கும்" என்கிறார். இல்லை, மேசியா வந்து தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும், அந்த எழுபதாம் வாரத்தின் மத்தியில் - அது ஏழு வருடங்கள் - அவர் ஜீவனுள்ளோர் மத்தியிலிருந்து பலியாக. சங்கரிக்கப்பட வேண்டும். எத் தனை பேருக்கு அது ஞாபகமுள்ளது? சரி, அப்படியானால் எத்தனை ஆண்டுகள் இயேசு, அந்த மேசியா, பிரசங்கித்தார்? மூன் றரை ஆண்டுகள். அப்படியானால் இன்றும் மூன்றரை ஆண்டுகள் நியமிக்கப்பட்டுள்ளது.

**224.** வெளிப்படுத்தின விசேஷம் **11**ம் அதிகாரத்தில், இந்த இரண்டு தீர்க்கதரிசி களும் ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள் தீர்க்கதரிசனம் உரைக்கின்றனர். புறஜாதி மணவாட்டி போய்விட்ட பிறகு, இஸ்ர வேலருக்கு மூன்றரை ஆண்டுகள் வாக்க

*ளிக்கப்பட்டுள்ளது. எத்தனை பேர் அதை புரிந்து கொண்டீர்கள்? பாருங்கள்? சரி, சரி..*

*64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #18*

---

*370.* **சகோ.பிரான்ஹாமே, நீர் எழுபது சபை வாரங்களின் பேரில் செய்தி அளித்த போது -** *(என்னை மன்னிக்கவும்)* **தானியேலின் எழுபது வாரங்களின் பேரில், முழு கடைசி வாரம் அல்லது கடைசி ஏழு வருஷங்கள் மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுதலில் எடுக்கப்படும் போது தொடங்குகிறது என்று நீர் கூறினீரென்று நினைக்கிறேன்.**

*297. இல்லை, இல்லை, இல்லை, இல்லை, இல்லை, இல்லை, இல்லை, இல்லை, இல்லை! நீங்கள் அதை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் (பாருங்கள்?) முழு வாரம் அல்லது கடைசி ஏழு*

வருடங்கள் அல்ல. இயேசு இவ்வுலகில் வந்த போது அந்த வாரம் தொடங்கினது - அவன், "மேசியா, அதிபதி, வந்து தீர்க்கதரிசனம் உரைப்பார், அந்த வாரத்தின் நடுவில் அவர் அறுப்புண்டு போவார்" என்றான். இயேசு சரியாக மூன்றரை ஆண்டு காலம் பிரசங் கித்தார், அது ஏழு நாட்களாகிய வாரத்தின் நடுவில். பாருங்கள்? இன்னும் மூன்றரை ஆண்டுகள் மீதமுள்ளது.

**298.** இப்பொழுது, மோசேயும் எலியா வும் பூமிக்கு வரும் போது அது வெளிப் படுதல் புத்தகத்திலும் சகரியாவிலும் காணப் படுகிறது... (சகோ. கூமர், உங்கள் கேள்வி யும், சகோதரி கூமரின் கேள்வியும் அதன் பேரில்தான்). இப்பொழுது, அவர்கள்... சகரியா 4ம் அதிகாரத்திலும், வெளிப்படுத் தல் 11ம் அதிகாரத் திலும் இந்த இரு ஒலிவ மரங்கள் - அது மோசேயும், எலியாவும் - அவர்கள் பூமிக்கு வரும் போது சரியாக 1260 நாட்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள்.

*அது என்ன? சரியாக மூன்றரை ஆண்டு காலம். அது சரியாக அதே காரியம்தான். பாருங்கள்? இதை கேட்ட அருமையான நபர் யாராயிருப்பினும், மிகவும் அழகாக தாளில் எழுதப்பட்டுள்ளது, வேத சம்பந்த மான தலைப்பு, கோடுகள் இங்கேயும் மற்றவைகளும், அது மிகவும் அழகாயுள்ளது. இது ஒரு நல்ல கேள்வி, ஆனால் நான் கூறினதை நீங்கள் புரிந்து கொள்ள வில்லை. அந்த முழு வாரமும் இப்பொழுது முடி வடையும் என்று நான் ஒரு போதும் நினைத்ததேயில்லை. மேசியா அறுப்புண்டு போகிறார். இதை நான் இங்கு பிரசங்கித்தது எத்தனை பேருக்கு 'ஞாபகமுள்ளது? நிச்சய மாக! பாருங்கள்? ஏழு நாட்கள்.*

*371.* **அப்பொழுது முதற்கொண்டு, முதல் மூன்றரை ஆண்டுகள் இயேசுவின் ஊழி யத்தின் போது நிறைவேறினது போல் தோன்றுகிறது** *(நல்லது, இங்கு அதை நீங்கள் சரியாக கூறியிருக்கிறீர்கள்)* **ஆனால்**

**"வாரத்தின் நடுவில்" என்று கூறப்படுவது அந்தி கிறிஸ்து தான் செய்த உடன் படிக்கையை முறிப்பதை குறிப்பிடுவது போல் தோன்றுகிறது...** *(இல்லை, அந்தி கிறிஸ்து கடைசி மூன்றரை ஆண்டுகள் முடி வில் தான் தன் உடன்படிக்கையை முறிக் கிறான். பாருங்கள்?).* **தானியேலின் செய்தி ஒலிநாடாவை நான் எவ்விதம் புரிந்து கொண்டேன் என்றால், இயேசு எருச லேமுக்குள் கி.பி. 20ம் ஆண்டில் சவாரி செய்து சென்ற போது, முதல் அறுபத் தொன்பது வாரங்கள் முடிந்து விட்டது, எனவே அவருடைய ஊழியத்தின் அந்த மூன்றரை ஆண்டுகள் அறுபத்தொன்பது வாரங்களில் சேர்க்கப்படும்: கடைசி முழு வாரம் அல்லது ஏழு ஆண்டுகள் இனிமேல் நிறைவேற வேண்டும், அது எடுத்துக் கொள்ளப்படுதலின் போது தொடங்கும். இதை தயவுகூர்ந்து எனக்கு தெளிவாக்கும்.**

***299.*** *உங்களுக்குத் தெரியுமா, சகோதரனே, சகோதரியே, இந்த கேள்வியைக் கேட்டவர் யாராயிருந்தாலும் மிகவும் அழகானது (பாருங்கள்?), ஆனால் நான் கூறினதை நீங்கள் சிறிது தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். பாருங்கள்? இயேசு எருசலேமுக்கு வந்த போது (அது முற்றிலும் உண்மை), அது... பாருங்கள்? அவர் அங்கிருந்து நேராக சென்று சிலுவையிலறையப்பட்டார். பாருங்கள்? அவர் ஒரு வாரம் பாதியில் தீர்க்க தரிசனம் உரைத்தார் என்பது உண்மையே. அது மூன்றரை ஆண்டு காலம். இப்பொழுது, அவர் அறுப்புண்டு போனார், அவருடைய ஆத்துமா பலியாக செலுத்தப்பட்டது. இப்பொழுது, இன்னும் வர வேண்டியது. இந்தக் கடைசி நாட்களில் இன்னும் மூன்றரை ஆண்டுகள் யுதர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. தற்போது, எடுத்துக் கொள்ளப்படுவதற்காக பரிசுத்தவான்களின் ஒன்று கூடுதல் உண்டாகும்.*

---

*26 (ஒலி நாடாவில் காலி இடம் - ஆசி) அந்த படத்தை அன்று பார்த்தீர்கள் அல்லவா? - அவர் எப்படி அதை பக்க வாட்டில் திருப்பினார் என்று? ஏழு தூதர்களின் மேலே சென்றபோது எடுக்கப் பட்ட புகைப்படம் - அதை வலது பக்கம் திருப்பிப் பாருங்கள். அப்பொழுது பூமியை நோக்கிக் கொண்டிருக்கும் கர்த்தராகிய இயேசுவின் முகத்தைக் காண்பீர்கள். நான் ஏழு சபை காலங்களைக் குறித்து பிரசங் கித்தபோது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? இயேசு ஏன் வெண்மையான சிரசின் மயிரைக் கொண்டிருந்தார் என்று எனக்கு விளங்கவில்லை. அவர் ஒரு வாலிபன். நான் வேதாகமத்தை படித்தபோது, "அவர் நீண்ட ஆயுசுள்ளவரிடம் கொண்டுவரப்பட்டார். அவருடைய சிரசும் மயிரும் வெண் பஞ்சைப் போல் வெண்மையாயிருந்தது" என்று அதில்*

*இருந்தது. இயேசு சிலுவையில் அறையப் பட்ட போது, அவருக்கு முப்பத்தி மூன்றரை வயது மாத்திரமே ஆகியிருந்தது*

***65-07-11*** *வெட்கப்படுதல்*

---

***180.*** *'எடுத்துக் கொள்ளப்படுதல் மூன் றாம் முறை நிகழும். வெளி.**11:11-12**ல் கூறப் பட்ட இரண்டு சாட்சிகள் எடுத்துக் கொள் ளப்படுவார்கள்.*

*'மூன்றரை நாளைக்குப் பின்பு தேவனிடத் திலிருந்து ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவே சித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களை பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று.*

*இங்கே ஏறி வாருங்கள் என்று வானத் திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்' வெளி.**11:11-12.***

இவ்விரு சாட்சிகளும் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றவர்களாய் மறுபடியும் வந்து, யோசேப்பு தன் சகோதரருக்குச் சாட்சியாக இருந்தது போல, இவர்களும் யூதர்களுக்குச் சாட்சிகளாக இருப்பார்கள். அவர்களுடைய பிரேதங்கள் மூன்றரை நாட்கள் வீதிகளில் கிடக்கும். அதன்பின்பு ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்து அவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 'எடுத்துக் கொள்ளப்படுதல்' பழைய ஏற்பாட்டின் காலத்தில் மூன்று முறை நிகழ்ந்தது. புதிய ஏற்பாட்டின் காலத்திலும் அது மூன்று முறை நிகழும்.

***181.*** பரிசுத்தவான்களின் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக நாம் காத்திருக்கிறோம். 'எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் என்று வேதாகமத்தில் உரைக்கப்பட்டுள்ளதால், அது நிகழும் என்பது உறுதி.

***65-12-04*** ஆகாயத்தில்
எடுத்துக்கொள்ளப்படுதல்



# மூன்றரை வருடங்களைப் பற்றி, தீர்க்கதரிசி செய்தியில்...

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து